# கண்ணன் கவசம்

(இலவச வெளியீடு)



பாராயண நூல்

நூல் : கண்ணன் கவசம்
(2ம் பதிப்பு)

ஆக்கம் : ச.வே.பஞ்சாட்சரம்

வெளியீடு: பொன்னெழுத்துப் பதிப்பகம்
"சிவபுரம்"
இணுவில் மேற்கு,
இலங்கை.

அச்சுப்பதிப்பு:
கஜானந் பிறின்ரேர்ஸ்
கற்பகப்பிள்ளையார் கோவிலடி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

# கண்ணன் கவசம்

பண்டிதர்.ச.வே.பஞ்சாட்சரம்



## விநாயகர் காப்பு

கண்ணன் மணிவண்ணன்
காக்கும் சிறைமீட்கும்
வண்ணங்கள் வாழ்த்தவும்
மேற்கினுவைப் ~ பண்ணவன்
தண்டா மரைத்தாள்கள்
சாந்திதந்து நெஞ்செல்லாம்
உண்டாக்க ஞான ஒளி!

ஆயிரங்கண் அன்னை அண்ணா
கண்ணாமணி வண்ணா
தாயெனநீ காத்தருள்வாய்
கண்ணாமணி வண்ணா!

நீலவெண்ணெய்ச் சிலையழகா
கண்ணாமணி வண்ணா
காலும்கையும் பவளம்பூத்தாய்
கண்ணாமணி வண்ணா!

ஆயர்பாடி ஆனந்தமே
கண்ணாமணி வண்ணா!
தாயர்பாடும் தால்இன்பமே
கண்ணாமணி வண்ணா!

கோலாகலக் கோகுலத்தாய்
கண்ணாமணி வண்ணா!
நாலாயிர பிரபந்தம்பூண்
கண்ணாமணி வண்ணா

மாடு, கன்று மேய்த்துக்காக்கும்
கண்ணாமணி வண்ணா
மாடுதின்னுங் கொடியம்அல்லோம்
கண்ணாமணி வண்ணா!

ஆய்ச்சியர்கள் குரவையாடக்
கண்ணாமணி வண்ணா
தீய்க்கும்இடர் தீர்த்தருளும்
கண்ணாமணி வண்ணா!

கோபிமாதர் குழைகுறும்பா
கண்ணாமணி வண்ணா!
பாபியர்நாம் புகும்புகலே
கண்ணாமணி வண்ணா!

பூட்டுடைத்துச் சிறைகடந்தாய்
கண்ணாமணி வண்ணா!
மீட்டுச்சிறை காஎமையும்
கண்ணாமணி வண்ணா!

மத்தொலிக்கும் மனைகளெங்கும்
கண்ணாமணி வண்ணா
ஒத்தொலிக்கும் உன்சலங்கை
கண்ணாமணி வண்ணா!

கண்படாத விண்மீன்கள்
கண்ணாமணி வண்ணா
கண்சிமிட்டுங் கரியமேனிக்
கண்ணாமணி வண்ணா!

துவாரகையின் சுடர்விளக்கே
கண்ணாமணி வண்ணா!
அவாஅடங்கி அமரவைப்பாய்
கண்ணாமணி வண்ணா!

இடையனும்நீ முதல்வனும்நீ
கண்ணாமணி வண்ணா
கடையனையும் காத்தருள்வாய்
கண்ணாமணி வண்ணா!

திருவரங்கம் பள்ளிகொண்டாய்
கண்ணாமணி வண்ணா
குருவாயூர் குடியிருந்தாய்
கண்ணாமணி வண்ணா!

வல்லிபுரம் வண்ணையனே
கண்ணாமணி வண்ணா
புல்லியபொன் னாலையனே
கண்ணாமணி வண்ணா!

புலனொடுக்கி மனம்புதுக்கிக்
கண்ணாமணி வண்ணா
புலங்கனியப் பாடவந்தோம்
கண்ணாமணி வண்ணா!

மெய்ம்மறந்தோம் விழிநிறைந்தாய்
கண்ணாமணி வண்ணா!
வைகுந்தமோ இச்சபையும்
கண்ணாமணி வண்ணா!

பழிஅழிக்க மலம் அழிக்கக்
கண்ணாமணி வண்ணா
வழியெனில்உன் அடைக்கலம்தான்
கண்ணாமணி வண்ணா!

உன்னடிக்குச் சரண்புகாமல்
கண்ணாமணி வண்ணா
பின்னிழுக்கும் பழிமுதற்கொல்
கண்ணாமணி வண்ணா!

ஆசையெல்லாம் துன்பம்செய்யும்
கண்ணாமணி வண்ணா!
ஆசை உன்மேல் இன்பம்செய்யும்
கண்ணாமணி வண்ணா!

ஊறுங்கருணை விழிகளினால்
கண்ணாமணி வண்ணா!
ஏறெடுத்துப் பார்த்துநிற்போம்
கண்ணாமணி வண்ணா!

என்னென்ன தொண்டியலும்
கண்ணாமணி வண்ணா
முன்னிமுன்னிப் புரிந்துநிற்போம்
கண்ணாமணி வண்ணா!

என்னென்ன எமக்குயிர்ப்போ
கண்ணாமணி வண்ணா
உன்னியுன்னி நீதருவாய்
கண்ணாமணி வண்ணா!

ஒன்றுன்னருள் பெற்றுவிட்டால்
கண்ணாமணி வண்ணா
என்றும்எல்லாம் நீதருவாய்
கண்ணாமணி வண்ணா!

ஆசைகள்தீய்த் தருளுவதால்
கண்ணாமணி வண்ணா
நாசமுறல் தடுத்தருளுங்
கண்ணாமணி வண்ணா!

முழுமையாய்ச் சரண்புகுந்தோம்
கண்ணாமணி வண்ணா
அழிவுநீக்கிக் காத்தருள்வாய்
கண்ணாமணி வண்ணா!

இங்கொழுங்காய் வாழவைத்தே
கண்ணாமணி வண்ணா
உங்குசேரும் பலம்அருளும்
கண்ணாமணி வண்ணா!

இருகையேந்திச் சரணடையக்
கண்ணாமணி வண்ணா
துரோபதையின் மானங்காத்தாய்
கண்ணாமணி வண்ணா!

மீட்க! காக்க! என்றழைக்கக்
கண்ணாமணி வண்ணா
மீட்டுக்காத்தாய் ருக்குமிணியைக்
கண்ணாமணி வண்ணா!

சிவனின்ஆண்மைத் சத்தியனே
கண்ணாமணி வண்ணா!
சிவனைக்காத்த மோகினியே
கண்ணாமணி வண்ணா!

உன்னுள் உலகம் அடக்கம்என்பார்
கண்ணாமணி வண்ணா!
உன்னுள் நாமும் அடக்கமன்றோ
கண்ணாமணி வண்ணா!

கொலைவிழைந்த கம்சனுக்கு
கண்ணாமணி வண்ணா
கொலைவிளைந்த காரணனே
கண்ணாமணி வண்ணா!

அக்கிரமம் மிகுந்ததையா
கண்ணாமணி வண்ணா!
சக்கரத்தை இங்கனுப்பாய்
கண்ணாமணி வண்ணா!

வெவ்வினைகள் வேரறுக்கும்
கண்ணாமணி வண்ணா!
வெவ்விடர்கள் வேரறுக்கும்
கண்ணாமணி வண்ணா!

வெம்மலங்கள் வேரறுக்கும்
கண்ணாமணி வண்ணா!
வெம்மிடிகள் வேரறுக்கும்
கண்ணாமணி வண்ணா!

வெம்பகைகள் வேரறுக்கும்
கண்ணாமணி வண்ணா!
வெம்பிறவி வேரறுக்கும்
கண்ணாமணி வண்ணா!

குருடுநீங்க அடியர்நெஞ்சம்
கண்ணாமணி வண்ணா
கருடன்மீது காட்சி நல்கும்
கண்ணாமணி வண்ணா!

சஞ்சலங்கள் துடைப்பவனே
கண்ணாமணி வண்ணா!
நெஞ்சடங்கும் சாந்திநிலா
கண்ணாமணி வண்ணா!

பாஞ்சசைனியம் முழங்கிக்
கண்ணாமணி வண்ணா!
சாய்ந்தமனம் நிமிரவைப்பாய்
கண்ணாமணி வண்ணா!

வேய்ங்குழலின் குளிரிசையால்
கண்ணாமணி வண்ணா!
காய்ந்தமனம் கசியவைப்பாய்
கண்ணாமணி வண்ணா!

அல்லின்மேனி ஐயனார்க்குத்
தாய்நீ மணிவண்ணா
வல்லிமார்க்குத் தந்தையும்நீ
கண்ணாமணி வண்ணா!

சேலை திருடு வோனும்நீயே
கண்ணாமணி வண்ணா!
சேலை வளர்க்குவோனும்நீயே
கண்ணாமணி வண்ணா!

நீரின்சோற்றின் தேவைவைத்தாய்
கண்ணாமணி வண்ணா
கோரும்பக்திக் குணம்தரவே
கண்ணாமணி வண்ணா!

துளசிதரா! முரளிதரா!
கண்ணாமணி வண்ணா!
ஒளிபெற நாம் வழிதிறவாய்
கண்ணாமணி வண்ணா!

கடமைகடமை கடமையென்றாய்
கண்ணாமணி வண்ணா!
கடமை உன்றன் கழல்புகவே
கண்ணாமணி வண்ணா!

உன்னருளை எண்ணல், பேசல்
கண்ணாமணி வண்ணா
என்னஇன்பம் என்னஇன்பம்
கண்ணாமணி வண்ணா!

அருந்திஉன்னைப் பெறும்செல்வங்கள்
கண்ணாமணி வண்ணா
கரும்புதின்னுங் கைக்கூலியே
கண்ணாமணி வண்ணா!

உலைக்கும்எங்கள் மனமொடுங்கும்
கண்ணாமணி வண்ணா!
வலுக்கப்புத்தி உன்நினைவால்
கண்ணாமணி வண்ணா!

சுட்டிநீலச் சிறுவனாகக்
கண்ணாமணி வண்ணா
பட்களுள் பரிந்தேஉலாவும்
கண்ணாமணி வண்ணா!

தோழர்சூழக் கபீர்தாசர்
கண்ணாமணி வண்ணா
யாழைமீட்டிப் பாடியாடுங்
கண்ணாமணி வண்ணா!

ஹரேராம ஹரேகிருஷ்ணா
போன்றபக்தர் கூட்டம்
பராவிப்புகழ் பாடிஆடுங்
கண்ணாமணி வண்ணா!

தெள்ளமுதம் ஊற்றெடுத்துத்
தேவலோகங் காட்டும்
புள்ளாங்குழல் மன்னவனே
கண்ணாமணி வண்ணா!

காயாம்பூ நீலமேனிக்
கண்ணாமணி வண்ணா!
வாயாரவே வெண்ணெய்உண்ணும்
கண்ணாமணி வண்ணா!

தூற்றும்பனியும் கடலும்வானும்
கண்ணாமணி வண்ணா!
ஏற்றுன்தியானம் நீலமான
கண்ணாமணி வண்ணா!

காது,கண்,நா,நாசி,கை,கால்
காப்பாய் மணிவண்ணா!
வாதம் பித்தம் பிணிகள் நின்றுங்
காப்பாய்மணி வண்ணா!

புற்றழுத்தம் முட்டில் நின்றுங்
காப்பாய்மணி வண்ணா!
பற்பலவாம் பிணிதடுத்துங்
காப்பாய்மணி வண்ணா!

இச்சைசீற்றம் வெறிதடுத்துக்
காப்பாய்மணி வண்ணா!
அச்சம்சோர்வு பதற்றமின்றிக்
காப்பாய்மணி வண்ணா!

உடலில் நெஞ்சில் உறுதிபேணிக்
காப்பாய் மணிவண்ணா!
அடிகள்புக்கோம் சரணம்ஐயா
காப்பாய் மணிவண்ணா!

நாலுகரணம் நறுமையாக்கிக்
கண்ணாமணி வண்ணா
காலில் முத்திக் கதிதருவாய்
காப்பாய் மணிவண்ணா!

அருள்கஇம்மை மறுமைஇன்பம்
கண்ணாமணி வண்ணா!
அருள்கசாந்தி அருள்கசாந்தி
ஐயாமணி வண்ணா!

**"ஓம்நமோ நாராயணாய"**

# கிடைக்கும் இடங்கள்

1. பொன்னாலை கிருஷ்ணன் கோவில்
2. வல்லிபுரம் ஆழ்வார் கோவில்
3. வண்ணை வரதராசப்பெருமாள் கோவில்
4. வட்டக்கச்சி ஸ்ரீரங்கநாதர் கோவில்
5. முள்ளியவளைக் கண்ணன் கோவில்
6. தெகிவளை கண்ணன் கோவில்
7. திருமலை கண்ணன் கோவில்
8. கந்தபுரம் கண்ணன் கோவில்
9. வவுனியா கண்ணன் கோவில்

# இலவசம்

2000 சித்திரையில் கிளி/கந்தபுரம்
கண்ணன் சந்நிதியில் அரங்கேறிய
இக்கண்ணன் கவசம் நூல்,
அடியவர் கோரிய ஒலிநாடாவாகவும்
வெளியிடப்பெற்று,
இன்று கண்ணன் ஆலயங்களில்
ஒலிக்கிறது. இன்றைய தமிழர்
தேவை நோக்கி இலவசமாக
மீண்டும் வெளியிடப்படுகிறது.
இந்நூல் அனைவரும் பாராயணம்
பண்ணிக் காக்கும் கண்ணக்
கடவுளின் காவல் பெற்று
உய்வார்களாக!

அடியவன்
**ச.வே.பஞ்சாட்சம்**